# மூதூர் முன்னேற்றக் காவியம்



காப்பியக் கதிரோன்:
## எம்.எம்.ஏ அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் முன்னேற்றக் காவியம்

காப்பியக் கதிரோன் எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


- நூலின் பெயர் :- மூதூர் முன்னேற்றக் காவியம்.
- விடயம் :- கவிதை (காவியம்)
- நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- ஒக்டோபர் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 300/=
- ISBN :- 978-955-38066-6-6
- தொடர்புகளுக்கு :- 0776288299




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராணம் ஹஜ்ரத்துக் காண்டம் - உரை நூல் (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்.
9. நாயகக் காவியம். (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஸ்ர.ஃப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் - ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் - ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. படகு மூழ்கிய காவியம்.
24. மூதூர் சுனாமிக் காவியம்.
25. மனையாள் மாட்சிமைக் காவியம்.
26. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்.
27. மூதூர் எம்.எம்.ஏ.அனஸின் நன்னெறிக்குறள்.
28. சிறுவர் கவிப்பேழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் ஆசிரியரும் மூதூர் உயர்ச்சியுற வேண்டும் என்ற உன்னத நோக்கம் கொண்டவரும் என் அரசியல் பயணப் பாதையில் எனக்கு உந்து சக்தியாய் இருந்தவருமான அல்ஹாஜ் எம்.எம். மன்சூர் அவர்களுக்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு கிழக்கு மாகாணத்தில் மூதூர்ப் பிரதேசம் செல்வத்தின் களஞ்சியமாகத் திகழ்ந்தது. தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுத் திகழ்ந்தது. வறுமை என்ற வார்த்தைக்கு இங்கு வாழ்வதற்கு இடமில்லாமல் போனது.

இதனால்த்தான் அன்று மூதூரின் வளத்தையும், வனப்பையும் பாடிய மூதூர் உமர்நெய்னார் புலவர் அவர்கள்.

"புவியினிலே விளங்குமிம் மூதூரெ னும்பதி
பெங்குநதி பாய்வதனா லெங்கும்வள மாகி
கவினொழுகு நெல்நெ லொடுகன்னலும் மலிந்து
காட்சிதரு கின்ற திருமாட்சிபெ றுநாடு

நாட்டையான் மருதநில மென்றுசொல் வோனோ!
நற்கடல்சா ருமொரு நெய்தல்என் பேனோ!
நீட்டியமலைச் சாரற் குறிஞ்சிநில மாமோ!
நெடுங்கான னமுல்லை நிலமெனப்பகர் வேனோ!

பகர்வதற்க ரியநிலம் நாலுமிமொன் றாகப்
பாங்காக வோரிடஞ் சேர்ந்திருந்தது போல
தகுதியுற வளமெல் லாங்குறையா திருந்தலித்
தன்மையுறு நாடு மிகத் தொன்மையுறு நாடு"

என்று பாடினார்.

"அதே போன்றுதான் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் " மாவலியின் பெயரால் விளங்கும் மணித்திரு நாடு" என்று பாடிய பாட்டானது. அது மூதூர் மண்ணின் மகிமையைத் தான் குறிக்கின்றது. எனக் கூறி மறைந்த எழுத்தாளர் மூதூர் வ. அ. இராசரத்தினம் அவர்கள் பெருமிதம் அடைகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று மூதூரின் மகிமையை பாட வந்த எனது தந்தையார் மர்கூடம் கவிஞர். எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள்

"மங்காவள மாவலியும் மேற்கோட
மீன்மிகைத்த வங்கக்கடல் கிழக்காக
பொங்குநதி வெருகலுடன் குருகளுமே
பொலிவாகத் தெற்கினிலே பாய்ந்தோட
எங்கும்நிறைந் திட்ட நல்ல நீர்வளத்தால்
எழில் கொண்ட எங்களூர்தான் மூதூரே!

வண்டாடும் சோலைநிதம் மணம்வீசும்
வகையான பறவையினம் நீராடும்
வண்ணமயில் ஆடியகம் மகிழ்வூட்டும்
வாவிகளில் கமலங்கள் மலர்ந்திருக்கும்
வண்டலிடை வாவிமீன் துள்ளிவரும்
வனப்புடனே காட்சிதரும் மூதூரே!

என்று பாடினார்.

இத்தகு செழுமையும் செல்வமும் பெற்றுத் திகழ்ந்த மூதூர் இன்று வறுமையின் பிடியில் சிக்குண்டு தவிக்கின்றது. வடக்குக் கிழக்கில் இனப் பிரச்சனைகள் ஏற்பட்டு வன்செயல்கள் இடம்பெறத் தொடங்கிய கடந்த 30 வருட காலமாக மூதூர்மண் பட்ட, படுகின்ற வேதனைகளும், சோதனைகளும் மிகமிக அதிகம். இலங்கை நாட்டிலே மூதூர் மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களைப் போல வேறு எந்த ஊர் மக்களும் இவ்வளவு அதிகமாக அனுபவித்திருக்க மாட்டார்கள். இந்தக் காலகட்டம் தான் (1990 தொடக்கம் 2019 வரை) மூதூர் மக்களை வழிநடாத்த, அவர்களுக்கென்று ஓர் தகுந்த தலைமைகள் இல்லாமல் போன காலகட்டமாகும். தகுந்த தலைமைகள் இல்லாமைதான் மூதூரின் அவலங்கள் அனைத்துக்கும் அடிப்படையாய் அமைந்தது.

ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் பிழையாக அமைந்து விடுமாயின், அச்சமூகம் முற்றாகவே அழிந்துவிடும் அபாயம் இருக்கின்றது. அந்த வகையில் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வை மீட்டுப் பார்க்க வேண்டிய ஓர் நிலைமை இங்கு பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்ததும் முஸ்லிம் சமூகத்தின் அடுத்த தலைவர் யார்? என்ற கேள்வி முஸ்லிம்களிடையே எழுந்தது. அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித உடலை நல்லடக்கம் செய்யும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அது பற்றிக் கதைக்க " ஸகீபா பனிஸாயிதா" எனும் அரங்கில் மதினத்து அன்ஸார்களில் சிலர் ஒன்று கூடினர். இச்செய்தி அபூபக்கர் (றழி) அவர்களின் காதுகளுக்கும் எட்டியது. நபி (ஸல்) அவர்கள் உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு முதன்மையும், முன்னுரிமையும் கொடுப்பது முக்கியமானதாயினும், தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வது என்பது இளம் இஸ்லாமிய சமூகத்தின் ஜீவமரணப் பிரச்சனை. அதில்ஒரு தவறு நடந்துவிட்டால், அது முஸ்லிம் சமூகத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து அபூபக்கர் (றழி), உமர் (றழி), அபூஉபைதா (றழி) ஆகிய மூவரும் நபி (ஸல்) அவர்களின் ஜனாஸாவை அப்படியே வைத்துவிட்டு, அக்கூட்டத்திற்கு விரைந்து சென்றனர். முஸ்லிம் சமூகத்தின் அடுத்த தலைவரை குறைஷிக் குலத்தில் இருந்து தேர்ந்தெடுக்க வழியும் செய்து, இஸ்லாமிய அரசை வலிமை பொருந்தியதாக ஆக்கினர். தலைவராக வருபவர். அரேபிய தீபகற்பகத்தில் பலம் பொருந்திய குடும்பத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். அக்குடும்பம்தாள் குறைஷிக் குலம் என்பதையுழ் எடுத்தியம்பினர்.

இவ்வரலாற்று நிகழ்வில் இருந்து மூதூர் மக்கள் தங்கள் தலைமைத்துவத்தை எங்கிருந்து, எப்படி, எவரிடம் கையளிப்பது என்ற வினாவுக்கு, தக்க பதிலைக் காண முடியும். அவ்வாறு பொருத்தமான தலைமைத்துவத்தை தேர்ந்தெடுத்து விட்டால் மூதூர் முன்னேற்றமிக்க ஊராகத் திகழும் என்பது மிக உறுதியான உண்மையாகும். இதனைத் தவிர்த்து யாரோ! எவரோ! எங்கிருந்து வருபவர்களின் நலனுக்காக எங்கள் தலைமையை நாம் விட்டுக் கொடுப்போமாயின் மூதூரின் அவலம் தொடர்கதையாக இருந்து கொண்டே இருக்கும்.

மேலும் இந்த மூதூர் மீதும், அதன் உயர்ச்சியின் மீதும் அதிக பற்றும் அக்கறையும் கொண்டவர்களாக நாம் திகழ வேண்டும். எங்கள் ஊரை அரசோச்சும் அறியாமை இருளை, சிந்தனைக் கீற்றுக்களால் விரட்டியடிப்போம். எம்ஊரவர்கள் எல்லோரும் அல்லாமா இக்பால்களாகவும், மௌளானா முகம்மதலி ஜின்னாக்களாகவும் இருப்பதனைப் பிற ஊரவர்களுக்கெல்லாம் புரிய வைப்போம். ஏமாற்றுப் பேர்வழிகள் இனி எம்மை அணுகாதிருக்கச் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் மண்ணினதும், மக்களதும் உயர்ச்சிக்கு உதவ வேண்டும் என்ற உன்னத நோக்கோடு எனது இருபத்திநான்காவது வயதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களுடன் இணைந்து, அக்கட்சியின் தேசிய ரீதியிலான செயற்குழுச் செயலாளராக பதவிவகித்துக்

கட்சிக்கு காத்திரமான பங்களிப்பை நல்கினேன். திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சமூகத்திற்குக் குறிப்பாக மூதூர் முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய சேவைகளை ஆற்ற வேண்டும். அதற்காக அரசியல் அதிகாரத்தைப் பெறும் பொருட்டு 1994ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டேன். அத்தேர்தலில் கட்சியில் இரண்டாம் இடத்தில் வந்தேன். எனினும் பாராளுமன்றப் பிரதிநிதியாகும் வாய்ப்புக்கிட்டவில்லை. இதன்பின்பு.

அன்று நாட்டின் மாபெரும் பலம் பொருந்திய அமைச்சராக இருந்த மர்ஹூம் எம்.எம்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் அமைச்சர் கடிதங்கள் சுமார் முன்நூறு வரை அவர் அமைச்சர் பதவியேற்ற மூன்று மாத காலத்துக்குள் பெற்று, மூதூரின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டேன். மூன்று மாத காலப்பகுதிக்குள் என்னிடமிருந்து பல்வேறு விடயங்களுக்குமாக சுமார் முன்னூறு கடிதங்களைப் பெற்று, என்னிடம் மிகவும் அதிகமாக வேலைகளை அனஸ் வாங்குகிறாரே நான் இந்நாட்டில் அனசுக்கு மட்டுமா மந்திரி இல்லையே முழுநாட்டு மக்கள் விடயங்களும் பார்க்க வேண்டுமல்லவா! ஒரு மனிதனுக்கு வேகம் வேண்டும் தான், அதற்காக தம்பி அனஸ் இப்படி வேகமாகச் செயற்படக்கூடாது என்று, அன்று அமைச்சர் அஷ்ரப் அவர்கள் மூதூர் பிரமுகர்கள் சுமார் 30பேர்கள் கூடியிருந்த பாராளுமன்றக் கூட்டத் தொகுதியில் வைத்துக் கூறினார். இக்கூட்டத்தில் மேலும் அமைச்சர் அஷ்ர.்.ப் அவர்கள் கூறினார். நான் அனசை இந்நாட்டில் ஓர் பெரும் பணக்காரனாகக் காண ஆசைப்பட்டேன் குறிப்பாக புகார்தீன் காஜியாரைப் போல காண ஆசைப்பட்டேன். நேரடியாக அனசை அழைத்து வேண்டிய தொகைப் பணம் தருகிறேன் என்றும் கூறினேன். ஆனால் அவர் எனக்கு உங்கள் பணம் தேவை இல்லை என்று மறுத்துவிட்டார் என்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மூதூர் பிரமுகர்கள் சிலர் எம்.எம்.மன்சூர் (ஆசிரியர்), எம்.எஸ்.வதூத் (ஆசிரியர்), எஸ்.கஸ்ஸாலி (ஆசிரியர் – நிருபர்),எம்.ஏ.எம். நியாஸ் (D.S), எம்.எஸ். பஸ்றி, மீரா சலீம், மர்கூடம் எம்.எஸ். ய.்.யா (ஆசிரியர்), மர்கூடம் K. ஜெமீல் (பஜீர்) போன்றோர்கள்.)

ஆம். உண்மைதான் மூதூர் மண்ணுக்கும், மக்களுக்கும் அதிகப்படியான சேவைகளை மிக விரைவாகச் செய்ய வேண்டுமென்ற என் ஆர்வமும், என் பிறப்போடு வந்த வேகமும், துடிப்பும் தான் நான் மூன்று மாத காலத்துக்குள் முன்னூறு கடிதங்கள் பெற்று செயற்படக் காரணமாகும். அதுபோல் இன்று பள்ளிவாயல்கள் கட்டுவது கூட பணத்திற்காகவே என்றாகிவிட்ட எங்கள் சமூகத்தில் என்னை புகார்தீன் காஜியாரைப் போல பெரும் பணக்காரனாக ஆக்குமளவுக்கு பணம் தருகிறேன் என என் அரசியல் குருநாதர் அஷ்ர.்ப் அவர்கள் சொன்ன போது நான் அதை மறுத்ததும், எனது தனிப்பட்ட உயர்வை விட இந்த ஊரினதும், மக்களினதும் உயர்வுதான் முக்கியம் எனக் கருதியே தான்.

“என் அபார ஆற்றல்
நாட்டு அரசியல் அதிகாரத்துள்
அதிக நெருக்கமாக ஆவதற்கிருந்தது.
நாட்டில் அபிவிருத்தியின் அடையாளமாக
என்னூர் மூதூர் திகழ இருந்தது.
என் இலட்சிய நதி
பெருக்கெடுத்தோட இருந்தது.
அந்தோ!... நான் எத்தகு செயல் வீரனாக
ஆக இருந்தேன் என்பதை
யாரும் அறிய மாட்டாாகள்.
துரோக இடிகள் என்னைச்
செயலிழக்கச் செய்துவிட்டன.

நன்றி.

எம்.எம்.ஏ. அனஸ்
15.10.2019

மட்டக்களப்பு வீதி,
பெரிய பாலம்
மூதூர் – 05
தொடர்புகளுக்கு – 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் முன்னேற்றக் காவியம்

## நோக்கம்

எந்தன் ஊராம் மூதூரின்
ஏற்றம் இல்லா நிலைகண்டு
வந்த உளத்தென் வேதனையை
வடிக்கக் கவியாய் நாடிட்டேன்.
அந்தக் கணமே அதற்காக
அகமே உவந்து முயன்றிட்டேன்.
இந்த நோக்கம் ஒன்றேதான்
இதையான் யாக்கக் காரணமாம்.

## காப்பு

என்னரும் பதியாம் மூதூர்
ஏற்றமே இழந்த தன்மை
என்னுடை உளத்தை வாட்ட
எழுதிடத் துணிந்தேன் யானும்
முன்னேற் றக்கா வியம்என
மூதூர் நிலைமை தன்னை
இன்னதில் பிழைகள் ஏதும்
இருந்திடா இறையே! காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஞ்சல்

காவியம் யாக்கும் காரியமோ!
கடினச் செயலாம் யானறிவேன்.
ஆவல் மிகைத்த காரணத்தால்
அதனில் யானும் இறங்கிட்டேன்.
பாவளம் எந்தன் நாவினிலே
பரந்த சமுத்திர மாவதற்க்குக்
காவலன் இறையே உன்னருளைக்
கெஞ்சிக் கேட்டேன் எனக்கருள்வாய்!

என்னரும் பாட்டன் உமர்நெய்னார்
என்றிடும் புலவர் பெற்றிட்ட
நன்றாம் தமிழின் ஞானத்தை
நானும் பெற்றிட அருள்புரிவாய்
உன்னத தமிழின் ஊற்றான
உளத்தையும் எனக்குத் தந்திடுவாய்
என்பதி மூதூர்க் காவியமும்
ஏற்றம் பெறவும் செய்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுநகர் வாழ்த்து

நாட்டினிலே திகழ்கின்ற நற்பதியாம் மூதூர்
நாற்புறமும் நதிபாய்ந்து நீர்வளத்தில் ஓங்கும்.
வாட்டுகிற வறுமைக்கு வாழ்வில்லை இங்கு
வளம்மிக்க ஊருக்கும் விதப்புரையாய் விளங்கும்.

வறுமையது இல்லாத வளவூரே என்று
விளங்கிடுவர் இவ்வூரை வருவோர்கள் நன்கு
சிறப்பான வளங்கள்பல செறிந்திருக்கும் இவ்வூர்
செகமீதில் உயரூரே செப்பிடுவோம் நாமும்.

மாவலியின் பெயராலே மிளிரும்திருப் பதியாய்
மண்மீதில் மூதூரை மொழிந்திடுவோம் நாமும்
ஆவலுடன் இப்பதியை அனைவருமே நாட
ஆயிரமாம் அர்த்தங்கள் அத்தனையும் உண்மை.

புவனத்துச் சொர்க்கமெனப் புகழ்ந்துரைப்போம் இதனை
பசுமைக்கும் இவ்வூர்தான் பரிந்துரைப்போம் நாமும்
தவம்கிடந்தும் கிட்டாத தக்கபெரும் செல்வம்
திரண்டிட்ட களஞ்சியமும் தான் மூதூர் என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியம்

என்னரும் பதியாம் மூதூர்
ஏற்றமே காண வேண்டும்.
நன்றென பிறவூர் போன்று
நாளுமே உயர வேண்டும்.
உன்னத தலைமை தன்னை
உயர்ந்தோர் நல்க வேண்டும்.
வன்முறை அற்ற ஊராய்
வளமுடன் வாழ வேண்டும்.

கண்ணியச் செயல்கள் ஊரில்
கவினுற ஓங்க வேண்டும்.
புண்ணியம் புரியும் மக்கள்
பெருந்தொகை ஆக வேண்டும்
மண்ணில் மாண்பின் ஊராய்
மூதூர் மாற வேண்டும்.
எண்ணிடும் மக்கள் எண்ணம்
ஏற்றமாய் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்க் கென்றும் ஊரில்
நல்லிடம் உரித்தாய் வேண்டும்
புல்லரைப் புரியும் ஆற்றல்
பெரிதெனப் புலர்தல் வேண்டும்.
எல்லையே இல்லாச் செல்வம்
என்றுமே ஊர்க்கு வேண்டும்.
வல்லவன் இறையும் அருளை
வாரியே வழங்க வேண்டும்

உன்னத உள்ளம் கொண்டோர்
ஊரினில் உயர வேண்டும்
தன்னலம் இல்லாச் சிந்தை
தழைத்துமே ஓங்க வேண்டும்.
நன்றாம் உள்ளம் கொண்டோர்
நாளுமே உயர வேண்டும்.
கன்னமே நோக்காய்க் கொண்டோர்
கீழ்நிலைக் காக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினில் ஊர்க்கு நல்ல
அரும்பெரும் உயர்வு வேண்டும்.
நெறிமுறை பற்றி வாழும்
நன்றாம் நிலைமை வேண்டும்.
வறியவர்க் ஈயும் நல்ல
வனப்புறு செல்வர் வேண்டும்
குறியெலாம் பணமாய்க் கொண்டோர்
குழியினுள் மறைய வேண்டும்.

பரந்ததாம் சிந்தை கொண்ட
பாங்குறு மக்கள் வேண்டும்
கரமெலாம் தூய்மை மிக்கக்
கண்ணியோர் நிறைய வேண்டும்.
திறமையே கொண்டோர் தமக்குத்
தக்கதாம் இடமும் வேண்டும்.
தரையினில் மூதூர்க் கென்றும்
தனிப்பெரும் மகிமை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினைப் புகட்டும் நல்ல
ஆசான் குலமும் வேண்டும்.
வறுமைகள் அற்ற ஊராய்
வளர்ச்சிகள் பெறவும் வேண்டும்.
பெரியவர் நெறிகள் யாவும்
பெருமையை நல்க வேண்டும்.
சிறுமையின் நோக்கத் தாரைச்
சிந்தையால் உணரல் வேண்டும்.

கல்வியில் ஊர்க்கு நல்ல
காத்திர உயர்ச்சி வேண்டும்.
பல்கலை ஞானம் ஊரில்
பாங்குடன் பெருக வேண்டும்.
நல்லவர் ஊரில் என்றும்
நாயகர் ஆக வேண்டும்.
தொல்லைகள் இல்லா ஊராய்
தரணியில் திகழல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரப் பார்வை கொண்ட
தூய்மையின் மாந்தர் வேண்டும்.
தீரவே ஆய்ந்து அறியும்
திறனுறு தன்மை வேண்டும்.
பாரமாய் எதையும் நோக்காப்
பாங்குறு தன்மை வேண்டும்.
பூரண ஞானம் மிக்கோர்
பல்கிப் பெருக வேண்டும்.

பஞ்சமா பாத கங்கள்
புதைகுழி யாக வேண்டும்.
வஞ்சக உள்ளம் கொண்டோர்.
வாழ்வது குன்ற வேண்டும்.
நெஞ்சகம் தன்னில் மக்கள்
நெறிமுறை காக்க வேண்டும்.
நஞ்சென ஊர்க்கு ஆனோர்
நசிங்கியே போக வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினில் தலைமை எல்லாம்
உன்னதம் காக்க வேண்டும்
பாரிய பணிகள் தன்னைப்
பாங்குடன் புரிதல் வேண்டும்.
தூரமாம் சிந்தை இவர்க்குத்
துலங்கிட வேண்டும் மேலும்
வீரமே விஞ்சி நின்று
வாய்மையும் காக்க வேண்டும்.

உயிரினைத் துறந்து தானும்
உண்மையைக் காப்போம் என்ற
உயரிய சிந்தை கொண்டோர்
உயரிடம் வகித்தல் வேண்டும்.
கயமையே இல்லா நல்ல
கண்ணியத் தன்மை கொண்டோர்
வியப்புறு பணிகள் எல்லாம்
விரும்பியே செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத் துள்ள மலரினை
முகர்ந்திடும் தன்மை வேண்டும்.
மற்றவர் மலரை நாமும்
மணத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
பற்றெலாம் ஊரில் கொண்டு
பாங்குடன் நடத்தல் வேண்டும்.
கற்றவர் கல்வி தனுக்குக்
கண்ணியம் கொடுத்தல் வேண்டும்.

பிறரின் பல்லை விடவும்
பிரியமே எமது முரசில்
சிறப்புற நாமும் கொள்ளும்
சிந்தைத் தெளிவு வேண்டும்.
நிறைவுறு தலைமை ஆற்றல்
நிறைந்தோர் ஊரில் இருக்க
பிறவூர் தலைமை நாட்டம்
பெரிதுமே தவிர்த்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினில் பற்று எங்கள்
உளமெல்லாம் நிறைய வேண்டும்.
பாரிய பணிகள் ஊர்க்குப்
புரிந்திடும் நாட்டம் வேண்டும்.
ஆரெவர் வந்த போதும்
அவரினைத் தலைவர் என்கும்
காரியம் தவிர்த்தல் வேண்டும்
கரிசனை ஊரில் வேண்டும்.

பிறவூர்த் தலைமை தன்னைப்
பெரிதுமே தவிர்த்தல் வேண்டும்.
வருகிற காலம் தன்னில்
வாக்கதன் பலத்தால் நாமும்
சிறப்புறு தலைவர் தன்னைச்
சீக்கிரம் எடுத்தல் வேண்டும்.
குறையெலாம் நீக்கி ஊரும்
குதூகலம் காணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினில் அமைச்சர் என்று
ஒருவர் ஆக வேண்டும்.
பாரிய பதவி தன்னில்
பலருமே அமர்தல் வேண்டும்.
காரியம் எல்லாம் ஊர்க்குக்
கதியாய் நிகழ்தல் வேண்டும்.
ஊருமே உயர நாமும்
உதவிகள் புரிய வேண்டும்.

ஊரின் பெயரை வைத்து
உழைத்திடும் கயவர் தம்மின்
காரியம் எல்லாம் பொசுங்க
கண்ணியோர் முன்வரல் வேண்டும்.
நேரிய சிந்தை கொண்ட
நல்லோர் தம்மை நாமும்
பாரிய பதவி தாங்கப்
பரிந்துரை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவரே இல்லா நல்ல
கண்ணிய ஊரே என்று
இயம்பிடும் நிலைக்கு மூதூர்
இனிதுற இருத்தல் வேண்டும்.
வியப்புறு விருத்தி எல்லாம்
வாய்த்திட ஊர்க்கு நாமும்
இயன்றதாம் பணிகள் எல்லாம்
இனிதுறச் செய்தல் வேண்டும்.

எங்கோ இருந்து வந்திடும்
எத்தர் தம்மை எல்லாம்
தங்கத் தரத்தின் நல்ல
தலைவராய் ஏற்றுக் கொள்ளும்
பங்கமாம் செயலை எல்லாம்
போக்கிட வேண்டு மம்மா!
எங்களின் தலைவ ராக
எம்மவர் வேண்டும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவ சமூகம் ஊரில்
மேன்மை அடைய வேண்டும்.
ஆனதாம் அவர்கள் குறைகள்
அனைத்துமே தீர வேண்டும்.
காணவே அவர்கள் உயர்வு
காத்திரத் திட்டம் வேண்டும்.
தானமும் அவர்கள் செய்யத்
தனத்தில் உயர வேண்டும்.

வறுமையின் பிடியில் சிக்கி
வளமிலா வாழ்வு வாழும்
அருமையின் மூதூர் மீனோர்
அவலம் தீர வேண்டும்.
அரசின் உதவி எல்லாம்
அவர்களை அடைய வேண்டும்.
சிறுமை வாழ்வை அவர்கள்
சீக்கிரம் அகற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ச்சியை மீனோர் காண
உரியதாம் வழிகள் வேண்டும்.
தயவினை அரசும் அவர்க்குத்
தகுபடி நல்க வேண்டும்.
வியத்தகு மீன்பிடி படகுடன்
வீட்டுத் திட்டமும் துறைமுகமும்
நியாயமாய் அவர்கள் பெற்று
நல்நிலை அடைய வேண்டும்.

சிறிய வள்ளம் மூலம்
சீறும் கடலில் மீன்கள்
சிரமமாய்ப் பிடிக்கும் தொழிலில்
சீரிய மாற்றம் வேண்டும்.
பெரிதாம் தொகையாய் மீன்கள்
பிடித்திடும் நிலைமை வேண்டும்.
வறுமை நிலைகள் அவர்க்கு
வாழ்வில் நீங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் உண்ண மட்டும்
தொழிலிது போது மென்று
கனபேர் கதைக்கும் இந்தக்
கீழ்நிலை மறைய வேண்டும்.
தனமது ஈட்டும் தொழிலாய்த்
திறன்பட உயர வேண்டும்.
கனம்மிகு தொழிலாய் மீன்பிடி
கீர்த்தியும் காண வேண்டும்.

இன்று இலங்கை நாட்டில்
இருக்கும் மீனவர் தொழிலில்
சின்னத் தோணி மூலம்
சிறிதாம் மீன்கள் பிடிப்போர்
என்றதாம் நிலையில் உள்ளோர்
எம்மூர் மீனவர் அன்றோ!
என்றதாம் உண்மை ஈதை
எவரிடம் எடுத்துச் செல்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசும் வழங்கு கின்ற
ஆழ்கடல் படகும் இல்லை.
சிறப்பாம் வீட்டுத் திட்ட
சங்கதி தானும் இல்லை.
வருவோர் தமக்கு எல்லாம்
வாக்கதை அளிப்ப தாலே
பெறுகிற தொன்று மின்றிப்
படுகிறார் பாடு மீனோர்.

என்னரும் தந்தை யான
எஸ்எல் முகைதீன் என்னும்
உன்னத கவிஞர் அன்று
உரைத்த கவிதை யொன்றில்
இன்னலின் மூதூர் மீனோர்
இலக்கணம் தன்னைச் சொன்னார்.
" தரையில் படுக்கை யுடனே
தின்றது தான் மிச் சமென்றார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினைச் சுனாமி தாக்கா
உயரிய காப்பு வேண்டும்.
பாரிய அளவில் அதனின்
பாதகம் தடுக்க வேண்டும்.
காரியம் இதற்காய் ஊரில்
கடற்கரைத் தடுப்பு வேண்டும்.
பாரிய அலையைத் தடுக்கும்
பாங்குறு தடைகள் வேண்டும்.

உயிர்களை இழந்து பெற்ற
உதவியே சுனாமி வீடு
தயவிது தன்னால்த் தானே
தட்டினர் கல்லின் வீடு
பயங்கரச் சுனாமி இன்றேல்
பெரிதும் மீனோர் வாழ்வு
வியப்புறு ஓலைக் குடிலே
விளங்குவோம் நாமும் நன்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைப் பிடியில் சிக்கி
வாழ்ந்திடு மூதூர் மீனோர்
பெருமோர் ஏற்றம் காணும்
பாதையைக் காணல் வேண்டும்.
பிறவூர் மீனோர் வாழும்
பெரிதாம் செல்வ நிலைக்கு
வரவே இவர்கள் எல்லாம்
வழியினைக் காணல் வேண்டும்.

ஓட்ட மாவடி திருமலை
ஒழுவில் வாழைச் சேனை
நாட்டினில் இதுபோல் பலவூர்
நன்றாம் செல்வம் மீன்பிடி (யால்)
ஈட்டி உயர்வை பெறுகையில்
இல்லா நிலையில் எம்மோர்
வாடி வாழ்வதும் ஏனோ!
விடிவும் விரைந்து வருமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னூ ருயிரை மீனோர்
முற்றாய் இழந்து தானே
இன்று சுனாமி வீட்டில்
இருக்கும் நிலையும் கண்டார்.
அன்றேல் இன்றும் கூட
அகமாய் ஓலைக் குடிசை
அன்றோ இருந்தி ருக்கும்.
அதுவே உண்மை என்போம்.

தங்களின் வாழ்வு பற்றித்
தாங்களே சிந்திக் காவிடில்
எங்கனம் இவர்கள் வாழ்வு
ஏற்றம் காண முடியும்.
பங்கமாம் தன்மை யோரைப்
பாரிய தலைவர் ஆக்கின்
இங்கிவர் உயர்ச்சி தன்னில்
இருந்திட முடியு மாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தன்னை இவர்கள்
அருமை மார்க்கம் என்று
கருதிடும் வகையில் செய்யும்
காரியம் தன்னால்த் தானே!
வருகிற தலைமைகள் தன்னால்
வேதனை அடைந்து வாரார்
சிறப்புறு சேவைத் தலைமையைச்
சிந்தையால் தேர்தல் எப்போ!

வயலின் செய்கைக் காரரும்
வறட்சி வெள்ளம் இதனால்
துயரில் வாடு கின்ற
சோக நிலைதான் ஊர்க்கு
உயரிய விளைச்சல் தானும்
உரித்தாய் ஆவ தில்லை
நயமிலாத் தொழிலால் இவர்கள்
நட்டமே காணு கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியின் காலம் தன்னில்
மழையினால் வெள்ளம் வந்து
பாரிய அழிவு தன்னைப்
பயிரினுக் களித்து நிற்கும்
ஊரினில் நீரும் தேங்கி
ஓடிடா நிலையும் ஆகும்.
காரியம் ஏது மின்றிக்
கமத்தார் கஷ்டம் காண்பர்.

கோடையின் காலம் வயல்கள்
கூடிய வறட்சி காணும்
வாடியே பயிர்கள் போகும்
வயல்கள் கருகிப் போகும்
கூடிய நஷ்டம் கண்டு
கலங்குவர் கமத்தார் எல்லாம்
ஈடிலா இன்னல் வாட்ட
இவர்களும் ஒடிந்து போவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவூர் தலைமை தன்னை
பெரிதாய் நம்பு கின்ற
சிறப்பிலாத் தன்மை தன்னைச்
சீக்கிரம் விரட்ட வேண்டும்.
பிறப்பினில் ஊரைச் சேர்ந்த
பரம்பரைப் பலமும் கொண்ட
நிறைவுறு பண்பும் மிக்க
நல்லதாம் தலைமை வேண்டும்.

மக்களின் மனதில் அவர்க்கு
மாபெரும் மதிப்பு வேண்டும்.
திக்கெலாம் அவர்க்கு நன்கு
தெரிந்துமே இருக்க வேண்டும்.
பக்க பலமாய் அவர்க்குப்
பலதாம் ஆயிரம் பேர்கள்
தக்கதாம் காப்பே என்று
திகழ்ந்திட வேண்டு மன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கூடம் தொட்டு
பள்ளி வாயல் வரைக்கும்
அள்ளிய திகாரம் தன்னை
அவருமே எடுக்க வேண்டும்.
கள்வர் கூட்டம் தன்னைக்
கடுமையாய் அடக்க வேண்டும்.
வெள்ளை உளத்தார்க் கெல்லாம்
வெகுமதி நல்க வேண்டும்.

தலைவரின் முடிவு ஒன்றே
தக்கதாம் முடிவு என்று
நலமுடன் மக்கள் எல்லாம்
நம்பியே நடக்க வேண்டும்.
கலையுடன் கல்வி எல்லாம்
காத்திர மடைய வேண்டும்
சிலையாய் அவனின் சேவை
செகத்தினில் நிலைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினில் யார்க்கும் அஞ்சா
உறுதியாம் உளத்தின் ஊடே
பாரிய முடிவை எல்லாம்
பாங்குடன் தலைமை அதுவும்
தீரமாய் எடுக்க வேண்டும்.
திறன்பட முடிக்க வேண்டும்.
நேரிய தன்மையும் அவரின்
நெஞ்செலாம் நிறைய வேண்டும்.

எல்லா வளமும் இங்கே
ஏற்றமாய் அமைந்தும் கூட
நல்லுயர் வின்றி மூதூர்
நாசமாம் நிலைக்கு ஆகி
அல்லலே அதனின் நல்ல
அடையா ளச்சின் னமென்று
அல்லோ! ஆகி விட்ட
அவலம் பாரும் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரினை உயர்த்தும் நல்ல
உன்னத தன்மை கொண்ட
பேரெலாம் ஊரை விட்டும்
ஒதுங்கியே தூரம் உள்ளார்.
நேரிய சிந்தை கொண்ட
நெஞ்சக மாந்தர் எல்லாம்
பேரதும் தெரியா வண்ணம்
பெரிதுமே ஒடுங்கி விட்டார்.

அரசியல் கட்சி என்ற
அரக்கத் தனமே மிக்க
குறுகிய சிந்தை தன்னால்
குட்டிச் சுவராய் ஆகிப்
பெருமொரு இடரில் மூதூர்
பொழுதெலாம் மூழ்கித் தவிக்கும்
சிறப்பிலா நிலையைப் பாரீர்
சீரழி வதையும் புரிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவோர் போவோர் எல்லாம்
வாய்த்தநற் தலைவர் என்ற
ஒருவித நிலைமை ஊரில்
ஓங்கிடும் நிலையை உணர்வீர்
சிறப்புறு தன்மை கொண்ட
சீரிய தலைமை எல்லாம்
ஒருவித பேச்சும் இன்றி
ஒதுங்கியே உளதும் பாரீர்.

நல்ல பாம்பின் இடத்தில்
நாக்கிலிப் புழுக்கள் அமர்ந்து
பொல்லா ஆட்டம் போடும்
பெரிதோர் இடமாய் மூதூர்
அல்லோ! திகழக் காணீர்
அரக்கர் பெரியோர் என்று
எல்லோர் தாமும் ஏற்கும்
எழிலிலா நிலையும் பாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையின் சிந்தை கொண்டு
துடிப்புடன் பணிகள் ஆற்றும்
ஆய்ந்தநல் ஞானம் கொண்ட
அரும்பெரும் அறிஞர் கூட்டம்
பாய்ந்துமே சமூகம் விட்டுப்
போயினர் தூரம் ஆக
ஆய்ந்துமே பார்ப்பின் ஈதில்
ஆயிரம் அர்த்தம் காண்போம்.

வேசமே போட்டு ஊரை
விழுங்கிடும் துட்டர் தம்மின்
வாசிகள் யாவும் புரியும்
விரிந்த ஞானம் தன்னை
நேசமே கொண்டு இறையும்
நம்மவர்க் கருள வேண்டும்.
காசதன் நோக்கின் கசடரைக்
காட்டியும் கொடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடிக் கொண்டு
களிப்புடன் பாலை அருந்தின்
மண்ணினில் தன்னை யாரும்
மேவிடார் என்றே பூனை
எண்ணிடும் தன்மை போல
எத்தரும் இங்கே உள்ளார்
கண்ணியோர் கண்டும் இவர்களைக்
காணா நிலையில் உள்ளார்.

இனப்பகை இல்லா ஊராய்
இனிதாம் அமைதி ஊராய்
சனங்களின் உள்ள மெல்லாம்
சத்தியம் ஓங்கும் ஊராய்
கனவிலும் கயவர் தமக்குக்
கண்ணியம் கொடுக்கா ஊராய்
தினமுமே மூதூர் திகழும்
தன்மைகள் மலர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவலி நீரே பாயும்
மாபெரு வளமும் பெற்று
பாவலர் பாடும் நல்ல
பசுமையின் நிலமும் நிறைந்து
பாவமே என்று மாற்றார்
பகன்றிடும் நிலைக்கு ஆன
கேவலம் மூதூர் அடையக்
காரணம் யாது அம்மோ!

## வேறு

மூதூர் மண்ணின் மேன்மைக்காய்
மேலாம் தியாகம் செய்திட்ட
ஈதூர்ப் பெரியார் மகிமைதனை
இயம்புதல் ஊர்க்குக் கடனாகும்
காதூர்க் கதைகளில் அவர்நாமம்
கேட்கும் வண்ணம் பதியினிலே
போதிய அளவில் அவர்களுடை
பெயர்கள் நிலைக்கும் நிலை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பு மரைக்கார் ஊருக்கு
வாய்த்த வளமாம் பேறென்போம்
காப்பாய் இருந்து மூதூர்க்குக்
காத்திரத் தலைமையும் அன்றளித்தார்.
மூப்புடை முன்னோர் அவரேதான்
மூதூர் முதுசமும் ஆகிட்டார்.
தோப்பாய் மூதூர் தழைப்பதற்கு
தொகையாய்ச் சேவையும் செய்திட்டார்.

அல்.ஹி தாயாப் பள்ளிதனை
அமைத்து, அறிவும் புகட்டிட்டார்
கல்வியில் மூதூர் முன்னேறக்
கனத்த பணிகளும் புரிந்திட்டார்.
நல்லரும் சீறா உரை தன்னால்
நாட்டில் புகழும் பெற்றிட்டார்.
அல்லோ அவர்தான் உமர்நெய்னார்
அரும்பெரும் புலவர் இந்நாட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்லாக் காசிம் மரைக்காரெனும்
செம்மலும் அன்று மூதூர்க்குச்
செய்த சேவைகள் ஏராளம்
சேமன் ஆகவும் இருந்திட்டார்.
அய்யோ அவரின் பணியெல்லாம்
அதிசயம் என்றே ஊரியம்பும்
உய்ய அன்று ஊரதுவும்
உன்னத தலைமையும் தந்திட்டார்.

சிறுகதை தன்னின் சிகரமெனச்
சிறப்பாம் புகழும் பெற்றிட்ட
பெருமோர் எழுத்தாளர் ஆன
பெரியார் வ.அ இராசரத்தினம்
அருமையாம் மூதூர் மண்ணதனை
அழகுறத் தன்கதை களில் செப்பி
பெரும்புகழ் தன்னை ஊருக்குப்
பெற்றுமே தந்து புகழுற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத சமூக சேவகனாய்
உயரிய உலமா ஆசானாய்
நன்றாம் கதையும் யாப்போனாய்
நலத்தைச் செப்பும் நாவலனாய்
இன்னரும் சிறப்புப் பெற்றிட்டார்.
இவர்தான் மசூர் எனும் ஆலிமவர்.
அன்னார் நாமம் ஊரினிலே
அழியா தென்றும் வாழ்ந்திடுமே!

அப்துல் ஜப்பார் ஆலிம் எனும்
அருமை உலமா அவர்தம்மை
ஒப்பே இல்லா வகையினிலே
உரைப்பர் பிறவூர் மக்களெல்லாம்
அப்போ! மூதூர் மௌலானா
ஆமாம் அவரின் மகிமையினால்
இப்பதி தனிலும் அவருக்கு
இமயத் துயர்வின் இடமேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் லத்தீப் காஜியெனும்
ஆலிம் குலத்து அரும்பேறாய்
இப்பதி உதித்த பெருமகனார்
இனிதே ஆற்றிய சேவைகளை
ஒப்பிட் டிங்கே பார்க்கையிலே
ஒருநூற் றுக்கதி கமாகிறதே!
அப்பழுக் கில்லா அவர்சேவை
அணியென ஊருக் கமைகிறதே!

பக்குவம் மிக்க ஆலிம்எனப்
பதியில் திகழ்ந்த பழீலாலிம்
தக்க அளவு சேவைகளைத்
தந்தார் பதிக்குப் புரிவோமே!
மக்கள் மனதில் இஸ்லாத்தின்
மகிமை நன்கு ஓங்குதற்று
அக்கறை கொண்டு பணிசெய்தார்.
அதனால் ஊரின் அகத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மூதூர்ச் சேமன் என
அமர்ந்து அலியார் தம்பிஹாஜி
நன்றே செய்த பணிகளெலாம்
நீங்கா நினைவாய் ஊரில் உள
என்றும் மூதூர் வரலாறு
எழிலாய் இவரைப் போற்றிடுமே!
உன்னத பெரியார் என்றிவரை
உணர்ந்து நன்கே புகழ்ந்திடுமே!

மரைக்கார் குலத்து மணியொன்று
மீசக் கார அனிபாவெனும்
சிறப்பில் ஓங்கிய பெரியாரும்
சமூகப் பணியில் சங்கமித்தார்.
நிறையப் பொழுதை ஊருக்காய்
நாளும் நன்கே செலவிட்டார்.
பரம்பரைத் தொழிலாம் பொதுப்பணியைப்
பாங்காய் அவரும் புரிந்திட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் தந்தை என்றான
கச்சு முகம்மது ஐயாவும்
நல்முறை ஊர்க்காய்ப் பணிசெய்து
நன்றாம் புகழும் பெற்றிட்டார்.
நல்லரும் பாடல் யாப்பதிலும்
நிகரே இன்றித் திகழ்ந்திட்டார்
சொல்லிவிடும் ஊரின் பெரியாரில்
சிறப்பாம் இடத்திலும் இவருள்ளார்.

மூதூர் மண்ணும் மக்களுமே
மேன்மை காணும் ஆவலிலே
ஏதோ! தன்னால் இயன்றவரை
எல்லாம் செய்த ஏந்தல்என
ஈதூர் அக்பர் கணக்காளரை
இயம்பி நாமும் மகிழ்வோமே!
மாதவம் மூதூர் செய்ததனால்
மைந்தனாய் ஊருக் கானாரவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடி கந்தரக் கமக்குலத்தின்
பேறென வட்டம் தனில்பிறந்தார்
நீடிய பார்வை நீதியுடன்
ஞானம் வீரமும் மிகைத்திட்டார்
கூடிய சமூக சேவையுடன்
கவிபுனை ஆற்றலும் கொண்டிட்டார்
தேடினும் கிட்டாப் பேறெனவே
தேர்வோம் எஸ்எல் எம் முகைதீனை

அக்கரைச் சேனைப் பகுதியது.
அடைந்தநற் பேறே கபீர்ஐயா
தக்க நல்ல சேவைகளால்
தரமாம் புகழில் திகழ்கின்றார்
அக்கரை கொண்டு கல்வியிலே
அப்பகு திஉயர வகைசெய்தார்.
மக்கள் மனதில் அவருக்கு
மாபெரும் இடமே உரித்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரைக்கார் பரம்பரை வாரிசென
மலர்ந்து மாபெரும் சேவைகளை
சிறப்பாய் மூதூர் மண்ணுக்குச்
செய்தார் ஜவாப்தீன் ஹாஜியுமே!
பரந்த பெரிதாம் சிந்தையுடன்
பணிகள் பலதும் ஊருக்குப்
புரிவதில் பிரியம் கண்டிட்ட
பெரியார் என்போம் அவரைநாம்.

நல்ல வரலாற் றெழுத்தாளர்.
நற்சமூ கசேவை யாளரதிபர்.
கல்வி தன்னில் ஊர்தனுக்கு
காத்திரப் பணியும் செய்திட்டார்.
பல்லரும் திறனும் கொண்டயிவர்
பண்பிலும் உயர்ந்து திகழ்ந்திட்டார்
நல்லார் எம்.ஏ சமதிவரின்
நாமம் ஊரில் நிலைத்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றென இந்தக் காவியத்தில்
நவின்றதாம் பெரியார் ஈர்எட்டு
உன்னலர் தம்மின் உயர்பணியை
ஊரும், உலகும் புரிவதற்கு
அன்றோ! அவர்கள் நாமத்தை
அழகே ஊரின் வீதிகட்கு
இன்றே சூட்டக் கேட்கின்றோம்.
இன்னரும் பணிஇதாம் சொல்கின்றோம்.

பக்கத் தூராம் கிண்ணியாவை
பார்த்துப் படிப்பினை பெறுவோமே!
தக்க கவிஞன் அண்ணலுக்கு
தரமாம் கண்ணியம் கொடுத்துளனர்.
அக்கறை யுடனே சிந்தையினால்
அதனைக் கொஞ்சம் ஆய்ந்திடுவோம்.
மக்கள் மனதில் பெரியோரை
மதிக்கும் தன்மையை வளர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் பெயரில் நகருண்டு.
அவரின் பெயரில் வீதியுண்டு.
அண்ணல் நூலகம் அங்குண்டு.
அதிக மகிமை அவர்குண்டு
கண்ணியம் கொடுக்கும் தன்மைக்கு
கிண்ணியா ஊரைப் போற்றிடுவோம்.
புண்ணியம் புரிந்த பெரியோரை
புரிந்திட மூதூர் வகை செய்வோம்.

ஜின்னா கபீபு நகரென்றும்
ஜாயா இக்பால் வீதியென்றும்
நன்றே எங்கள் மூதூரில்
நாமம் தரித்த இடமுண்டு.
இன்னதாம் நாமப் பெரியோர்கள்
இந்த ஊரைச் சாராதோர்
நன்றென அவர்களைக் கௌரவித்து
நம்மூர் நடந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மூதூர் மண்ணுக்காய்
அர்ப்பணம் செய்த பெரியோரை
வேணாம் என்றே நோக்குகிற
வேலையை மூதூர் செய்கிறதே!
ஈனம் மிக்க செயலிதனை
இனியும் தொடரக் கூடாது
ஆன பெரியோர் வரலாறே
ஆகும் ஊரின் வரலாறாய்.

ஊரைச் சேர்ந்த பெரியோர்க்கு
ஓரிடம் தானும் கொடுக்கலயே
பாரிய இந்தத் துரோகத்தைப்
புரிதல் ஏனோ! புரியலையே!
ஊரில் பெரியோர் பிறக்கலையா?
ஊமை நிலையில் உள்ளோமே!
பேரைச் சூடி ஊரவர்க்குப்
புகழும் பெருமையும் அளிக்கலயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பல்லின் மகிமைதனை
ஏனோ நாங்கள் புரியாமல்
தங்கம் என்றே பிறஊரார்
தரக்கீழ் முரசைப் புகழ்கின்றோம்.
பங்கம் மிக்க இச்செயலில்
பிரியம் அதிகம் கொள்கின்றோம்.
எங்கும் எங்கள் ஊர்என்றே
எழிலாய் இனிநாம் சிந்திப்போம்.

எங்கும் எதிலும் பணம் தன்னை
ஏற்ற இலட்சியம் எனக் கொண்ட
பங்கம் மிக்க தலைமைகளைப்
பேயாய் வெறுத்து ஒதுக்கிடுவோம்.
பொங்கும் மக்கள் புரட்சியினால்
பதவியை விட்டும் விரட்டிடுவோம்.
தங்கத் தரத்தோர் கரத்தினிலே
தலைமையை நாமும் கொடுத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊரும் உயர்வதற்கு
ஏற்ற பலவாம் திட்டங்களை
பங்கம் இன்றிச் செய்திடிலோ
பாங்காய் அதுவும் உயர்ந்திடுமே
தங்கம் விளையும் ஊராகத்
தரையில் தழைத்துத் திகழ்ந்திடுமே!
பொங்கும் செல்வப் பெருக்கதனால்
புவியில் புகழில் ஓங்கிடுமே!

கங்கைப் பாலத் தருகினிலே
கடலில் மாவலி சங்கமிக்கும்
பொங்கும் எழிலின் நிலப்பரப்பில்
பெரிதோர் தாவரப் பூங்காவை
எங்கும் இல்லா நிலையினிலே
எழிலாய் அமைப்பின் மூதூர்க்கு
தங்கச் சுரங்கம் என்றேதான்.
தந்திடும் அதுவோ செல்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நடுவூர் நல்லாற்றை
நாமும் காணல் அரிதாகும்.
ஓடும் கொல்லன் ஆறதுவோ
ஊர்க்குக் கிடைத்த பேறாகும்.
நீடிய திட்டம் வகுத்தே தான்
நன்கதம் ஓரம் வீதிவரின்
கூடிய வளர்ச்சி ஊர்காணும்
கடைகளும் தொகையாய் உருவாகும்.

விரிந்த நிலத்துப் பரப்பான
வேதத் தீவு இடத்தினிலே
பரந்த சிந்தை நோக்குடனே
புதிதாம் விமான நிலையமது
உருவே ஆக வகைசெய்யின்
பெரிதாம் செல்வப் பெருக்கினிலே
பதியாம் மூதூர் திகழ்ந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால்குழி கங்கை உப்பாறு
இத்தகு பாலம் ஊடாக
சிறப்பாம் புகையிர(த) பாதைதனை
சீனன் குடாவிருந்(து) மூதூர்க்கு
உருவாக் கின்அது மாபெரிய
உதவி ஊருக் காகிடுமே!
நிறைவாய் ஊரும் உயர்வதற்கு
நன்றாம் பங்கை நல்கிடுமே!

சிறந்த வசதிகள் கொண்டிட்ட
சர்வ தேசத் தரத்தினிலே
பெரிய விளையாட் டரங்கொன்று
பதியில் அமைவுற வேண்டுமேதான்
சிறப்பாய் ஊரும் உயர்ச்சியுற
சீரிய பங்கை இதுநல்கும்
சிரமம் என்றே கருதாமல்
சிரத்தை இதனில் எடுத்திடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்புக் காய்ச்சி மடுப்பகுதி
உரிய கேணிக் காட்டுப்பகு(தி)
உப்புநீர் ஓடை நிறைந்திட்ட
உயரிய நெய்தல் நகர் பகுதி
உப்பளம் செய்ய உகந்ததனால்
உரிய முயற்சிகள் செய்திடுவோம்.
தப்பா முறையில் உயர்விளைவை
தகுபதி மூதூர் பெற்றிடுமே!

இடிமண் ஆற்றின் அருகினிலும்
இலங்கும் சாபி நகர் ஆற்றின்
பிடியில் உள்ள நிலத்தினிலும்
பாரிய நன்னீர் மீன்வளர்ப்பைக்
கடினம் என்றே கருதாமல்
காத்திர மாகச் செய்திடுவோம்.
கொடுத்தே உள்ளான் இறையோனும்
கூடிய வளத்தை மூதூர்க்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிமண் என்னும் ஆற்றினது
இன்னரும் நன்னீர் வளம்தன்னை
நடுவூர் மூதூர் வெளியூடே
நன்கே ஓடும் வகையினிலே
நெடுமோர் வாய்க்கால் வெட்டிடிலோ
நம்பதி மூதூர் நாட்டினிலே
அடிப்படை அழகின் இடமாக
ஆகிடும் இதனால் என்போமே.

இடிமண் ஆற்றின் அருகினிலே
இருக்கும் செட்டிக் குளமென்னும்
இடத்திலும் தாவரப் பூங்காவை
இனிதே முயன்று அமைத்திட்டால்
வடிவில் மூதூர் உயர்ந்திடுமே!
வருகிற பயணியும் கூடிடுமே!
கடினம் என்றே கருதாமல்
காத்திர முயற்சி செய்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் முனையின் உள்ளாற்றில்
விளங்கும் உமிரிக் கரச்சைதனில்
கட்டிட வேண்டும் மீனவர்க்கு
காத்திரத் துறைமுகம் ஒன்றே தான்
கிட்டும் இதனால் மீனவர்க்குக்
கனத்த நன்மைகள் புரிந்திடுவோம்
எட்டாத் திட்டம் இதுவென்று
ஏனோ எடுத்து நோக்காதீர்.

மீனவ இளைஞர் சமூதாயம்
மீன்பிடி இயந்திர சாதனத்தில்
ஆன மேலாம் அறிவதனை
அடையும் நோக்கில் அவர்கட்கு
மீனவ தொழில்நுட் பக்கல்லூ (ரி)
முக்கியம் வேண்டும் மூதூர்க்கு
காணும் இதனால் மீன்பிடியும்
கூடிய உயர்வு ஊரினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர் குடியேற் றம்என்றிடும்
மேலாம் திட்டம் மூதூரில்
ஆன பெரிதாம் அளவினிலே
அமைதல் வேண்டும் அவசியமாய்
காண மீனவர் களிப்பதனைக்
கட்டிட வேண்டு ஆயிரமாய்
தானே வீடுகள் பெருமளவில்
தகுந்த நாவல டியிடத்தே.

இரண்டு ஆயிரம் பேர்கள் வரை
இனிதே இருந்து கூட்டமது
சிறப்பாய் நடத்தும் அளவுக்கு
சீரிய வசதி வளங்களுடன்
பெரிதாம் மாநாட் டுமண்டபமும்
பாங்காய் ஊரில் அமைத்திட்டால்
பெருமோர் சிறப்பை ஊருக்கு
பெரிதாய் நல்கிடும் புரிவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசா யக்குடி போற்றமொன்றும்
வேதத் தீவு எனுமிடத்தில்
அவசியம் அமைதல் வேண்டுமேதான்
ஆயிரக் கணக்கில் வீடுகளும்
அவற்றுடன் மற்றைய வசதிகளும்
அமைந்திடல் வேண்டும் சிறப்பாக
உவப்புடன் மக்களும் குடியேறி
உன்னத வாழ்வை அடைந்திடுவர்.

மூதூர்க் கால்நடை வளர்ப்போர்க்கு
மாபெரும் பேறாய் அமைத்திட்ட
ஈதூர் பன்வெட் டான் என்றிடும்
இன்னரும் மேய்ச்சல் நிலமதுவும்
போதுமென் றளவில் உள்ளதனால்
பெரிதாய் அதனைப் பயன்படுத்த
புதிய வீதிகள் வேண்டுமங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைப் பாலம் முதற்கொண்டு
கிளிவெட் டிப்பாலம் வரையும்
தங்கிய வீதி அருகெல்லாம்
தருக்கள் நட்டி வளர்த்தாக்கால்
பொங்கும் அழகின் பாசறையாய்ப்
பதியாம் மூதூர் பேர்பெறுமே!
எங்கும் மூதூர் அழகதனை
எடுத்தே கதைப்பர் மக்களுமே!

சிறிதாய் வளரும் திருக்கொன்றை
சிறப்பாய்ப் பூக்கும் மயில் கொன்றை
பெரிதாய் வளரும் நிழல்வாகை
பாதையின் அருகாம் வயற்பரப்பில்
பெருகி நன்னீர் பாய்கின்ற
பூமியைத் தேர்ந்து மதுரமரம்
குறிப்பாய் நட்டால் இதனாலே
கூடிய அழகாய் ஊர்திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடை காணி இரண்டேக்கர்
தானம் என்றே தந்தன்று
தன்னுடை பெயரில் விளையாடும்
தகுந்தோர் மைதானம் அமைத்திட்டார்
அன்றைய மூதூர்ப் பட்டினத்தின்
அருமைத் தலைவர் செய்லாக்கா(சிம்)
என்றிடும் மரைக்கார் குலமகுடம்
ஏற்றம் அன்றோ ஊர்க்கவரும்.

செய்லாக் காசிம் மரைக்காயர்
சிறப்பாம் விளையாட் டரங்கென்ற
உயரிய கல்லில் பொறித்திட்ட
ஒருகல் மைதான மூலையிலே
உயர்வாய் காட்சி நல்கியது.
உடைந்ததோ உடைத்ததோ யாரறிவார்
பெயரே இல்லா நிலையினிலே
பார்க்கிறோம் அதனை நாமின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி கெட்ட தன்மைக்கு
நல்ல உதாரணம் இதுவென்போம்.
நன்றே ஊரை உயர்த்திட்ட
நல்லார் இவரின் நாமத்தை
கொன்று விட்ட கொலைதன்னைக்
கொடுமை என்றே குறித்துரைப்போம்.
இன்று ஊர்உள பிரதேசச(பை)
இதனைக் காணா துள்ளதுவே!

திருமலை(யில்) ஏகாம் பரமென்னும்
தகுபெரி(யார்) பெயரில் மைதானமொன்றும்
மருதமு னையினில் ஆ.மு. சரி. (புதீன்)
மைதானம் என்ற பெயரினிலே
இருக்கும் மைதானம் எல்லாமும்
இவ்வூர்க் குப்படிப் பினையாய்
இருந்திட வில்லை ஏனாமோ?
இங்குளார் இதயத் துருவாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

- ஊரை உயர்த்தும் நோக்குடைய
உன்னத தலைவன் வாய்க்கட்டும்
பாரிய பணிகள் எல்லாமும்
பாங்காய் அவனும் செய்யட்டும்.

- அவலம் நிறைந்த ஊருக்கு
அவனால் உயர்வு கிடைக்கட்டும்
கவலைகள் அற்ற ஊராகக்
காட்சி மூதூர் அளிக்கட்டும்.

- நல்லார் பெரியார் என்கின்ற
நன்றாம் நிலைமை தோன்றட்டும்
பொல்லார் பொசுங்கிப் போயேதான்
புனித நிலைமை தோன்றட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வறுமை இல்லா ஊராக
வளர்ச்சி மூதூர் காணட்டும்
சிறுமைத் தனங்கள் இல்லாத
சிறப்புறு ஊராய்த் திகழட்டும்.

- உண்மை நேர்மை ஊரினிலே
உயர்வாய்த் தழைத்து ஓங்கட்டும்
புண்ணியம் மிகைத்த ஊராக
பேர்பெற் றும்மூர் திகழட்டும்.

- உள்ளத் தூய்மை கொண்டோர்க்கு
உன்னத நிலைமை கிட்டட்டும்
கள்ளத் தனமே உடையோரைக்
காலமும் காட்டிக் கொடுக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊரின் பற்று மக்களது
  உள்ளம் எல்லாம் நிறையட்டும்
  காரியம் யாவும் காசென்ற
  கசடர் வாழ்வு மாய்யட்டும்.

- ஊரைக் குழப்பிக் குளிர்காயும்
  உதவார் வாழ்வு பொசுங்கட்டும்
  வாரிப் பணத்தை குவிக்கின்ற
  வம்பரை ஊரும் உணரட்டும்.

- கறையே படியாக் கரங்களுக்கு
  காத்திரப் பதவி கிட்டட்டும்
  குறையே கொண்ட கொடியோரின்
  கொட்டம் ஊரில் அடங்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றவர் கல்வியை மதிக்கின்ற
கண்ணிய நிலைமை தோன்றட்டும்
பற்றெலாம் ஊரின் உயர்வென்கும்
பண்பார் கரங்கள் ஓங்கட்டும்.

- குள்ளத் தனங்கள் ஊரினிலே
குதூகலம் காணும் நிலையெல்லாம்
பள்ளம் தன்னுள் புதையட்டும்
புனிதத் தன்மை ஓங்கட்டும்.

- வஞ்சகம் கொண்ட உள்ளங்கள்
வளமே குன்றிப் போகட்டும்
நெஞ்சகம் எல்லாம் நேர்மையினால்
நிறைந்தோர் ஊரில் உயரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறையின் பள்ளி கட்டுவதும்
  இங்கே பணத்திற் கென்றான
  கறையாம் காரியம் மறையட்டும்
  களிப்பை ஊரும் காணட்டும்.

## இறையை வேண்டுதல்

- இறையே! உந்தன் அருள்தன்னை
  இன்னரும் பதியாம் மூதூர்க்கு
  நிறைவாய் நீயும் அளித்துவிடு!
  நிலமிசை அதனை உயர்த்திவிடு!

- உண்மை நேர்மை அத்தனைக்கும்
  உரித்தாம் பதியாய் ஆக்கிவிடு!
  உன்னத தன்மையின் ஊற்றாக
  உயர்ந்திட அதற்கு உதவிவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நல்லோர் கரத்தில் அதன்தலைமை
  நிலைத்திட நீயும் செய்துவிடு
  பொல்லாத் தனங்கள் இல்லாத
  புனித பதியாய் ஆக்கிவிடு.

- மூதூர் மண்ணில் நல்லமைதி
  மலர நீயும் அருளிவிடு.
  ஏது இடரும் இவ்வூர்க்கு
  என்றும் அணுகாக் காத்துவிடு.

- எந்தக் குறையும் இல்லாத
  எழிலாம் ஊராய் உயர்த்திவிடு
  இந்த நாட்டில் செல்வத்தில்
  இவ்வூர் இருக்கச் செய்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி ஞானம் அனைத்தினிலும்
காத்திர உயர்வை அளித்துவிடு!
நல்லோர் நிறைந்த பதியென்ற
நாமம் பெறவும் செய்துவிடு!

- வறுமை இல்லா வளவூராய்
வையம் மீதில் உயர்த்திவிடு!
சிறுமைச் செயல்கள் இல்லாத
சிறப்பாம் பதியாய் ஆக்கிவிடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் வாழ்த்து

என்னரும் மூதூர் வாழி!
எழிலுடன் என்றும் வாழி!
நன்றாம் வளங்கள் பெற்று
நாட்டினில் உயர்ந்து வாழி!
உன்னத தன்மை கொண்ட
உயரிய ஊராய் வாழி!
இன்னலே இல்லா ஊராய்
இனிதுற என்றும் வாழி

உயரிய தன்மை கொண்ட
உத்தமர் ஊராய் வாழி!
கயமைகள் மாய்ந்து நல்ல
கண்ணியம் நிறைந்து வாழி!
நியதிகள் நிலைத்து ஓங்கி!
நிம்மதி ஊராய் வாழி!
வயதினில் நீண்டு மக்கள்
வாழ்ந்திடும் நிலையில் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையே இல்லா ஊராய்
வளமுடன் மூதூர் வாழி!
குறையதும் இல்லா நிலையில்
குதூகலம் நிறைந்து வாழி!
சிறுமையே இன்றி ஊரில்
சிறப்புகள் மிகைத்து வாழி!
கறைகளும் அற்ற ஊராய்க்
கண்ணியம் மிகைத்து வாழி!

தரையினில் சிறந்த நல்ல
தனிப்புகழ் பெற்றும் வாழி!
சிறப்புறு தலைமை பெற்றுச்
சிறந்தநல் ஊராய் வாழி!
நிறைவுறு செல்வம் பெற்று
நிலமிசை நன்றே வாழி
முறையாம் மாண்பின் ஊராய்
மூதூர் வாழி! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

மூதூர் முன்னேற்றக் காவியத்தை
முற்றாய்ப் படிப்போரும் வாழியவே!
ஈதூர் முன்னேறப் பாடுபடும்
இன்னரும் மனிதர்களும் வாழியவே!
போதிய நற்பணிகள் ஊருக்காய்ப்
புரிந்திடும் புனிதர்களும் வாழியவே!
மாதவ ஊரெனவே மூதூரும்
மண்ணில் வாழியவே! வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் கும்மிப்பா

மூதூர் மக்களே வாருங்களேன் - ஊரின்
மாண்பிலா நிலையினை ஆயுங்களேன்.
பாதகத் தன்மையின் காரணத்தை – நன்கு
புரிந்தே தீர்வினைக் காணுங்களேன்.

ஏற்றமே இல்லா நிலைமைக்கு – ஊரும்
ஏகிய காரணம் காணுங்களேன்.
தோற்றதாம் ஊர்என ஆகிவிட்ட
தன்மையை நீக்கிட முயலுங்களேன்.

வறுமையில் வாடிடும் நிலைமைக்கு – ஊரும்
வந்ததன் காரணம் புரியுங்களேன்.
சிறுமையாம் காரியம் செய்வதனைச்
சிந்தையால் உணர்ந்து கொள்ளுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர் நிறைந்ததாம் ஊரெனவே – எம்மூர்
நாட்டினில் திகழ்ந்ததை நினையுங்களேன்
பொல்லார் பூமியாய் இன்றதுவும்
பேர்பெறும் காரணம் புரியுங்களேன்.

நல்லார் நசிங்கிடும் ஊரெனவே – எம்மூர்
நாமமே பெற்றதைப் பாருங்களேன்.
பொல்லார் யாவரும் புனிதர்எனப்
போட்டுள வேசம் புரியுங்களேன்.

வாசியே என்று வாழ்வோரை – ஊர்
வந்தே நீங்களும் பாருங்களேன்.
காசியின் நோக்கினில் கசடரெலாம்
காட்டிடும் கூத்தைக் காணுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத் திடத்தினில் சிறுநரிகள் - ஊரில்
சங்கமம் ஆனதைப் பாருங்களேன்.
தங்கத் தலைமைகள் எல்லோரும்
தொலைவில் போனதைப் பாருங்களேன்.

நல்லதாம் பாம்பதன் இடத்தினிலே – ஊரில்
நாக்கிலி ஆட்டம் பாருங்களேன்.
நல்லவர் போன்று நடிப்பதிலே
நம்மவர் கூத்தைப் பாருங்களேன்.

எல்லோ ருமிங்கே தலைவர் என – ஊரினில்
எண்ணிடும் செயலினைப் பாருங்களேன்.
அல்லலில் ஊரதும் இதனாலே
ஆனதை ஆய்ந்து பாருங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் இறைஞ்சல் குறள்

உன்னத ஊரென ஓங்கிட மூதூரை
நன்றென நாயனே நேசி.

நல்லோர் தலைமை நிலைத்திட மூதூரில்
நல்லருளை நாயனே நல்கு.

சத்தியம் மூதூரில் சீர்மையுறப் பேரிறையே
நித்தம் அருள்புரிவாய் நன்கு.

நல்லோர்கள் மூதூரில் நாயகராய் ஆகிட
வல்லோனே! உன்னருளால் வாழ்த்து.

வறுமைநிலை மூதூரில் வீழ இறையே
புரிவாய் அருளைப் பெரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் செழிப்பில் சிறந்தோங்க மூதூரும்
வல்லானே உன்னருளால் வாழ்த்து.

நல்லதாம் சிந்தை நிலைத்திட மூதூரில்
நல்லருளை நாயகனே நல்கு.

தூரத்துப் பார்வை துலங்கிட மூதூரைப்
பேரருளால் நாயகனே போசி.

நல்லோராய் வேசமிடும் நாசகரை மூதூரில்
இல்லாமல் ஆக்கே! இறை.

பொல்லாரின் கொட்டம் பொசிங்கிட மூதூரில்
நல்லருளை நாயகனே நல்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் முன்னேற்றக் குறள்

- மூதூரும் முன்னேற மேலாம் தலைமையது
போதுமே! என்போம் புரிந்து.

- விருத்தியுற்று மூதூர் வளஊராய் ஓங்க
அரும்பணிகள் ஆற்றுவோம் ஆய்ந்து.

- நல்ல தலைமையது நல்லணியாய் ஆகிடல்
செல்வமாம் மூதூர்க்குச் செப்பு.

- எல்லோரும் நாயகராய் எண்ணுகிற மூதூரில்
நல்லோரை நாயகராய் நாடு.

- தலைமையிலா மூதூரில் தோன்றியுள தாழ்மை
நிலையினை மாற்றிட நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூதூரை முன்னேற்ற முற்போக்குச் சிந்தனைக்கு ஆதர வளித்திடுவோம் ஆய்ந்து.

- அரசியலை மார்க்கமாய் அர்த்தம்கொள் மூதூர் பரந்தறிவு அற்றுளதே பார்.

- தலைமைத் தனத்தினது தேர்வு அமானி(த) நிலையென ஊரே நினை.

- தாம்மாறா மூதூரைத் தரணியில் நாயகனும் ஆம்மாற்றான் என்றே அறி.

- காசுக்கே வாக்கெனும் கள்ளமதை மூதூரில் தூசிக்க வேண்டும் துணிந்து

- அஸ்ர.'.ப் மறைவுடன் அன்னார் அரசியலும் அஸ்தமமாம் மூதூரே ஆய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போலித் தலைமைகளைப் போற்றிப் புனிதரென்கும்
  கோலமதை மூதூரில் காண்.

- மூதூர் விருத்தி முடங்க அரசியலே
  ஈதூர்க்குக் கேடாம் இயம்பு.

- நாட்டில் தலைமையிலா நாச நிலைதனுக்குக்
  காட்டுவோம் மூதூரைக் காண்.

- உயரிய தன்மை உரித்தெனக் கொண்டோர்
  தயவினை மூதூரே தேடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் முன்னேற்ற வெண்பா

உன்னத பார்வையும் ஓங்கிய சிந்தையும்
நன்றெனக் கொண்டிட்ட நற்பதி – என்றே தான்
நாட்டில் பதிமூதூர் நற்புகழ் பெற்றினிதே
ஈட்டிடும் கீர்த்தி இயம்பு.

காசினது பக்கம் கபடமாய்ச் சென்றிடும்
வாசியின் கூட்டமோ வாழ்பதியை – நேசிக்காத்
தன்மையது கொண்டு தரமிழந்து வாழ்வதால்
உன்னதம் குன்றுதே ஊர்க்கு.

மார்க்கமெனக் கட்சிதனை மேவும் அரசியலால்
ஓர் உயர்வும் ஊருக் குரித்தாகா – தேர்ந்திதைச்
சிந்தையிலே கொண்டு சிறப்புற மூதூர்க்காய்
விந்தைப் பணிசெய் விரைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப் பற்றுடன் அட்டாளைச் சேனையூர்
பக்கத்துக் கல்முனை போன்றவூர் —தக்க
தலைமையைப் பெற்றுத் தரமுற்று ஓங்கும்
நிலைகாண மூதூரே நாடு.

காத்தான் குடியுடன் காண்எழில் ஏறாவூர்
பூத்துப் புவியில் புகழுறும் - காத்திரமாம்
நல்நிலையை மூதூரே நீயும் உணர்ந்தேதான்
நல்லுயர்வு பெற்றிட நாடு.

தலைமையது வாய்க்காத் தரணியின் ஊர்கள்
அலைக்கழிந்து போகும் அறிவோம் - நிலையிதை
மாற்றியே மூதூரை முன்னேற்ற நாம் என்றும்
ஆற்றுவோம் நற்பணிகள் ஆய்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வீர் உணர்வீரே ஊர்மூதூர் மக்காள்!
பணத்தினது பக்கமாய்ப் பாயும் - குணத்தினைத்
தேர்தலில் பற்றாது தேர்ந்தாய்ந்து தான் நடப்பின்
பேர்பெற்று ஓங்கும் பதி.

அற்பத் தனத்தாலே ஆகாத் தலைமைகளைப்
பற்றிடுதல் மூதூர்க்குப் பேரவலம் - தொற்ற
வழியாகும் என்று விளங்கியே நாமும்
விழித்தெழுவோம் ஊர்க்காய் விரைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ.......... மூதூரே!

ஓ... மூதூரே!.......
உன்னைப் பற்றிக் கொஞ்சம் எண்ணிப்பார்.
இம் மாவட்டத்தில்
உன் இருப்பை இல்லாமல் ஆக்கச்
சதி நடக்கிறது.
உனக்கென்று ஓர் தலைமைத்துவம்
உருவாவதைத் தடுப்பதன் மூலம்
உன்னை அழிக்க முயற்சிகள் நடக்கின்றது.
இதை..... நீ... அறியாவிட்டால்
இலங்கையின் இதிகாசத்தில்
மூதூர் என்ற பெயரே
இல்லாமல் ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரே... உன் தலைமைத்துவம்
உன் உன்னதமானவர்களுக்கு
உரித்தென்று ஆகியிருந்தால்.....
நல்லோர் நல்லிடத்தின்
உரிமையாளர்களாய் உயர்ந்திருப்பர்.
தீயோர்..... தாமாகவே... ஊரைவிட்டு
ஒதுங்கும் நிலை உருவாகியிருக்கும்
வேசமிடுவோர் விளம்பரப்படுத்தப்பட்டிருப்பர்
பொதுப்பணிகள் பேரில்
பணம் குவிக்கும் கூட்டம்
தோற்றம் பெற்றிருக்காது.

ஊரின் அளவு கோலில்
உன்னத மானவர்களுக்கு
உயரிடம் உரித்தாக்கப்பட்டிருக்கும்.
சத்தியத்திற்குச் சான்றாக
மூதூரே! உணரப்பட்டிருக்கும்
சிறு ஆடுகளுக்கு
சிங்கத்திற்கான பட்டாபிஷேகம்
நடைபெற்றிருக்கவே மாட்டாது.
விளக்கு மாற்றுக்குப் பட்டுக்குஞ்சம்
கட்டும் காரியம் நடந்திருக்கவே மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரே!
நாட்டு அரசியலில்
ஆட்சியும் அதிகாரமும்
உனக்குரியவை அல்லவா!
ஆளுமையும் ஆற்றலும்
உன் உடைமையாய் இருக்கும் போது
நீயோ!.... உன் ஆட்சிஅதிகாரத்தை
பிறவூர்க் காரர்களிடம் கையளித்துவிட்டுக்
கண்ணீர் சிந்துவது.
மடமையிலும் மடமையல்லவா!

மூதூரில் வாழும்
ஒவ்வோர் வீட்டாருக்கும்
முற்றத்து மல்லிகையை
நுகரும் கலையைக் கற்றுக்கொடுப்போம்.
மூதூர் மக்களே!
நீங்கள்! கொட்டியாரக் கடலின் கரையில்
தென்றலை நுகரும் நேரமல்ல இது
அந்தக் கடலுக்குள்
உங்களை அழித்தொழிக்கும்
ஆழிப்பேரலையும்
அடங்கிக் கிடப்பதை அறிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் அலைகள்
கரைக்கு வருவதெல்லாம்
கரைக்கு வருவதற்காக அல்ல
அவை... திரும்பிச் செல்வதற்காகவே
என்பதை.... இப்போதாவது
தெரிந்து கொள்ளுங்கள்.

நாங்கள்
மூதூர் மண்ணின் சொந்தக்காரர்கள்.
பரம்பரை பரம்பரையாக
இம்மண்ணைக் கட்டிக் காத்தவர்கள்.
குறுகிய கட்சி அரசியலுக்காக
எம்மூரை நாம் இழக்கத் தயாரானதுதான்
மாபெரும் வேதனையாகவும்
வேடிக்கையாகவும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ!....
அழகின் அழகென ஒருபெண்
அவள் முகத்தில் புன்னகை இல்லை.
அவள் கண்களில் இருந்து
கண்ணீர்த் துளிகள்
நிலத்தில் வீழ்ந்து கொண்டிருந்தது.
அவள் மொத்தத்தில்
சோகத்தின் உருவாகவே தென்பட்டாள்.
இவள் யார்?
இவளுக்கு என்ன நேர்ந்தது? என்று
எல்லோரும் அறிவதற்கு
அவாவுற்றிருந்தனர்.
அப்போது... அங்கு வந்த...
முதியவர் ஒருவர்
அவரோ! பார்ப்பதற்கு
பெரும் ஞானிபோல் தோற்றமளித்தார்.
அவர் சொன்னார்.
"இவள் தான் மூதூர் மாதா"
தான் ஈன்றெடுத்த மக்களால்
விமோசனம் அடையவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தேர்ச்சியாகத்
துன்பங்களாலும், துயரங்களாலும்
வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறாள்.
அத்துடன் அந்நிய ஊரவர்களால்
இவள் அடிமைப் படுத்தப்பட்டும் உள்ளாள்.
இதன் காரணமாகத்தான்
இவள் ஒட்டுமொத்த வேதனையின்
உருவமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறாள்
என்று.

ஓ.... மூதூரே!
உன் அவலநிலை
என்னை அழச் செய்கிறது.

கதைகளில் எல்லாம்
உன் கதைதான்
சோகத்தின் சொர்க்கபுரியாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரே!...
உன் வரலாறு என்பது என்ன?
உன்னைச் சாராதவர்களாலும்
பிறவூாக்காரர்களாலும்
நீ..... ஆளப்பட்டதும்
ஆளப்படுவதும் தானே!
உன் வரலாறு.

ஓ... மூதூரே!
நீ.... ஈன்றெடுத்த
உன் புத்திரர்களுக்கு
பட்டாபிஷேகம் செய்கின்ற
நாள்த்தான்......
நீ.. விமோசனமும்
விடுதலையும் பெற்ற நாளாக
விளம்பப்படும் என்பதை
நன்கு விளங்கிக்கொள்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னரும் பதியாம் மூதூர்
ஏற்றமே காண வேண்டும்
உன்னத ஊராய் நாட்டில்
உயர்ச்சியும் அடைய வேண்டும்
என்றதாம் எண்ணம் எல்லாம்
என்னுடை உளத்தில் தோன்ற
அன்னதாம் உணர்வு தன்னால்
ஆக்கிட முயன்றேன் யானும்
இன்னதே மூதூர் முன்னேற்ற
இன்னரும் காவிய நூலாகும்.
பண்நெடும் ஆண்டின் பின்பும்
பதியினில் தோன்றும் மாந்தர்
என்னுடை எண்ணம் தன்னை
எழிலுறப் புரிந்து கொள்வர்
என்றதாம் திருப்தி எந்தன்
எண்ணம் நிறைந்து நிற்க
நன்றாம் மகிழ்வு கொண்டேன்
நாளுமே இந்த நூலால்.

காப்பியக் கதிரோன். எம்.எம்.ஏ. அனஸ்

ISBN 978- 955- 38066-6-6
9789553066666

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org